**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**

புதுச்சேரி 24.07.2017

## மேல்நிலை சிறப்புத் துணைத்தேர்வு ஜூன்/ஜூலை 2017

## தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற, ஜூன்/ஜூலை 2017 மேல்நிலை சிறப்புத்துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (தட்கல் தனித்தேர்வர்கள் உட்பட) தேர்வு முடிவினை, தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே 25.07.2017ம் தேதி (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் முதல் தாங்களே இணையதளத்திலிருந்து தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

**அதற்கான வழிமுறைகள் பின்வருமாறு:**

1. தனித்தேர்வர்கள் வருகிற **25.07.2017** முதல் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை www.dge.tn.nic.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன் **"Provisional Mark Sheet HSE Result – June 2017"** என தோன்றும் வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை தட்டச்சு செய்து, தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஜூன்/ஜூலை 2017 தேர்வுக்கான் விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **27.07.2017 மற்றும் 28.07.2017** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**விடைத்தாள் நகல் (Copy of the Answer Sheet) பெறுவதற்கான கட்டணம்:**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி | – | ரூ.550/– |
| பகுதி – II மொழி (ஆங்கிலம்) | – | ரூ.550/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.275/– |

**மறுகூட்டல் (Re-totalling) கட்டணம் :**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி, பகுதி – II மொழி (ஆங்கிலம்) மற்றும் உயிரியல் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

விண்ணப்பித்தபின் வழங்கப்படும் ஒப்புகைச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் விடைத்தாட்களின் நகல்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். மறுகூட்டல் முடிவுகள் பற்றியும் அறிய இயலும்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்